பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

23 05 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகில் மேற்கத்திய ஆதிக்கம் குறைந்து, ஆசிய நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
2. அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் ரயில்வேத்துறை சுயசார்பு அடைந்திருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. கல்வி நிறுவனங்களில் புகையிலை மற்றும் போதைப்பொருள் பயன்பாடு இல்லாத நிலையை உருவாக்க மத்திய கல்வி அமைச்சகம் நாடு தழுவிய இயக்கத்தை மேற்கொள்ள உள்ளது.
4. வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் செல்போன்களை வைப்பதற்கு சிறப்பு ஏற்பாடு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
5. மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

<<<<<<>>>>>>

உலகில் மேற்கத்திய ஆதிக்கம் குறைந்து, ஆசிய நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

டென்மார்க்கில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், தற்போதைய உலகில் பன்முகத்தன்மை அதிகரித்து வருவதாக கூறியுள்ளார்.

2008-ஆம் ஆண்டு வாக்கில் நிலவிய உலகளாவிய நிதி நெருக்கடியே இந்த மாற்றத்திற்கு காரணம் என்று குறிப்பிட்ட அவர், இதுபோன்ற நெருக்கடிகளை மேற்கத்திய நாடுகளால் மட்டும் சமாளிக்க முடியாது என்பது நிரூபனமாகியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதல் ஒரு தீவிரவாத பிரச்சினை என்றும், அது இந்தியா – பாகிஸ்தான் இடையிலான மோதல் அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

பருவநிலை மாற்றம், வறுமை போன்றவற்றுக்கு இடையே தீவிரவாதமும் தற்போது உலகளாவிய சவாலாக உருவெடுத்துள்ளது என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வந்தே பாரத், நமோ பாரத் போன்ற புதிய வகை ரயில்களை அறிமுகப்படுத்தியதன்மூலம், அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் ரயில்வேத்துறை சுயசார்பு அடைந்திருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் ஜமால்பூர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின்னர் நாட்டில் 50 ஆயிரம் கிலோமீட்டர் ரயில் பாதை மின்மயமாக்கப்பட்டுள்ளது என்றார்.

பாதுகாப்புத்துறை உட்பட அனைத்துத்துறைகளிலும் இந்தியா சுயசார்பு அடைந்திருப்பதற்கு ஆபரேஷன் சிந்தூர், சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜமால்பூரில் உள்ள ரயில் என்ஜின் பணிமனை மற்றும் இந்தியன் ரயில்வேயின் இயந்திரவியல் மற்றும் மின் பொறியியல் பயிற்சி நிறுவனம் 350 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கல்வி நிறுவனங்களில் புகையிலை மற்றும் போதைப்பொருள் பயன்பாடு இல்லாத நிலையை உருவாக்க மத்திய கல்வி அமைச்சகம் நாடு தழுவிய இயக்கத்தை மேற்கொள்ள உள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அரசின் பள்ளிக்கல்வித்துறை செயலாளர் திரு சஞ்சய் குமார், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாணவர்கள் மற்றும் இளைஞர்களை தீய பழக்கங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில், இம்மாதம் 31–ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 26–ஆம் தேதிவரை இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி நிறுவனங்களிலிருந்து 100 அடி தொலைவிற்குள் புகையிலைப்பொருட்கள் விற்பனையை தடுப்பதுடன், இளம் சிறார்களுக்கு அவற்றை விற்பதை தடை செய்யும் சட்டப்பிரிவுகளை முழுமையாக அமல்படுத்துமாறும் அவர் மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகில் அதிக இளைஞர்களை கொண்ட நாடாக திகழும் இந்தியாவில், இளைஞர்களின் ஆற்றலை வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பயன்படுத்த வேண்டும் என்றும் திரு சஞ்சய் குமார் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

இனிவரும் தேர்தல்களின்போது வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் செல்போன்களை வைப்பதற்கு சிறப்பு ஏற்பாடு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் துணை இயக்குனர் திரு பவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்குப்பதிவு தினத்தன்று வாக்காளர்களுக்கான சேவையை மேம்படுத்தும் நோக்கில், செல்போன்களை சணல் பை அல்லது சிறிய அளவிலான பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்குச்சாவடியின் நுழைவு வாயிலிருந்து 100 மீட்டர் தொலைவுக்கு அப்பால் அரசியல் கட்சிகளின் பூத் ஸ்லிப் விநியோக மையங்களை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ரிசர்வ் வங்கியின் 2024-2025–ஆம் நிதியாண்டுக்கான உபரித் தொகையாக 2 லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசுக்கு வழங்க அந்த வங்கியின் இயக்குனர்கள் குழு கூட்டம் ஒப்புதல் அளித்துள்ளது.

மும்பையில் ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்கோத்ரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளாதார நிலவரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டதுடன், இந்த ஆண்டுக்கான ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

அக்னிபாத் திட்டத்தின்கீழ் ராணுவத்திற்கு தேர்வு செய்யப்பட்ட அக்னி வீரர்கள், பாகிஸ்தானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் இருந்து இந்திய ராணுவ நிலைகளை பாதுகாத்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட சுமார் 3 ஆயிரம் அக்னி வீரர்கள், பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் பதிலடி தாக்குதலின்போது முக்கிய பங்காற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று விமானப்படைக்கு தேர்வு செய்யப்பட்ட அக்னி வீரர்கள் வான் பாதுகாப்புப்பிரிவில், ஆகாஷ்டீர் ஏவுகணைகளை இயக்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் மேற்கு எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்ட துப்பாக்கிச்சுடும் வீரர்கள் ரேடியோ ஆபரேட்டர், ஏவுகணைகளுடன் கூடிய கனரக வாகனங்களின் ஓட்டுநர்களாக இவர்களது பணி ஆர்ப்பணிப்பு மற்றும் உறுதிபாட்டுடன் இருந்தாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஜப்பான் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும், பாகிஸ்தான் அரசு தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்து வருவது குறித்தும் எடுத்துக்கூறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அனைத்துக்கட்சி குழுவினர் ஜப்பானின் டோக்கியோவில், லிபரல் ஜனநாயக கட்சியின் பயங்கரவாத எதிர்ப்பு ஆராய்ச்சிக்குழுவின் தலைவரும், முன்னாள் சட்ட அமைச்சருமான திரு **Yasuhiro Hanashi,** முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு **Minoru Kihara** உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேசினர்.

மேலும், ஜப்பானுக்கான பிரேசில், ஆஸ்திரேலியா, தென்கொரியா, கொலம்பியா, கிரீஸ் உள்ளிட்ட நாடுகளின் தூதர்களுடனும் கலந்துரையாடினர்.

அப்போது பேசிய அனைத்துக்கட்சி குழுவின் தலைவர் திரு சஞ்சய் ஜா, தீவிரவாதத்தையும், அதற்கு ஆதரவு அளிப்பவர்களையும் அவர்கள் எங்கு இருந்தாலும் அவர்களை அடியோடு ஒழிக்க இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் தலைவர்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக கூறினார்.

இதேபோன்று, திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான மற்றொரு குழுவினர் அபுதாபியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர்களை சந்தித்து இந்தியா மேற்கொண்ட நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தனர்.

திருமதி கனிமொழி தலைமையிலான மற்றொருக்குழுவினர் மாஸ்கோவில் ரஷ்ய தலைவர்களை இன்று சந்தித்து பேசினர்.

முன்னதாக, இந்த குழுவினருக்கு ரஷ்யாவுக்கான இந்திய தூதர் திரு வினய் குமார், இந்தியா – ரஷ்யா இடையேயான நட்புறவின் பல்வேறு அம்சங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாடுமுழுவதும் மூவர்ணக்கொடி பேரணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் சேலத்தில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

காந்தி ரோடு பகுதியில் தொடங்கிய இந்த பேரணி, கோட்டை மைதானம் வரை நடைபெற்றது.

இதில் 100 மீட்டர் நீளம் உள்ள தேசியக்கொடியை ஏந்தியவாறும், பாரத மாதா வேடம் அணிந்த குழந்தைகளும் கலந்துகொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<u>(வாய்ஸ் பைட் - முருகேசன் - 25 செகண்ட்ஸ்)</u>

**<<<<<<>>>>>>**

நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று புதுதில்லி சென்றுள்ள தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார்.

புதுதில்லி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், புதிதாக மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப்பணிகளையும் அவர் ஆய்வு செய்தார். பின்னர், பஹல்காம் தாக்குதலில் காயமடைந்து புதுதில்லி எயிம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழகத்தை சேர்ந்த சுற்றுலாப்பயணி டாக்டர் பரமேஸ்வரனையும், முதலமைச்சர் சந்தித்து நலம் விசாரித்தார்.

**<<<<<<>>>>>>**

ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். இரண்டு பேர் காயமடைந்தனர்.

இம்மாவட்டத்துக்கு உட்பட்ட **‘Thaticherla Motu** பகுதியில், காரும், லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளானவர்கள் அம்மாநிலத்தின் **‘Bapatla** பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

**<<<<<<>>>>>>**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 24-22, 17-21, 22-20 என்ற செட் கணக்கில், பிரான்சின் **Toma Junior**-ஐ வென்றார்.

-----------------

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Angel** இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

வடக்கு மாசிடோனியாவில் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட் கணக்கில், பிரேசிலின் **'Marcelo Demoliner – Zormann da Silva** இணையை வென்றது.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்றுவரும் அகில இந்திய ஹாக்கிப்போட்டியில் சென்னை **'Income Tax '** அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி, ஜுன் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

**<<<<<<END>>>>>>**